சிவமயம்

gistered as a News paperinʒCeylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹ ஐப்பசிமீ கசுஉ (1946 நவம்பர் 1 வெள்ளிக்கிழமை) [இல ருஅ

# வடபகுதித்துறைமுகம்

## ஒன்று திறக்கப்படுமா?

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயுள்ள வர்த்தகப் போக்குவரத்தைத் துரிதப்படுத்துதற்கு சென்னை அரசாங்கம் முயற்சி செய்கிறது. தூத்துக்குடி அல்லது கோடிக்கரையை ஓர் துறைமுகமாக்கினுல். அங்கிருந்து இலங்கைக்குப் போக்குவரத்துச் செய்தல் மிகச் சுலபம் என்று சென்னை அரசாங்கம் கருதுவதாக சென்னைப் பகிரங்கவேலைப்பகுதி மந்திரி ஸ்ரீஜுத் பக்தவத்ஸலம் அவர்கள் சென்றவாரம் பத்திரிகா நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

கோடிக்கரை யாழ்ப்பாணத்திலிருந்து ஆக 30 மைல் தூரம்தான். இது 25 ஆண்டுகளுக்கு முன் ஓர் துறைமுகமாகவிருந்து பின் உபயோகிக்கப்படாமல் விடப்பட்டது.

ஸ்ரீ பக்தவத்ஸலம் சென்றவாரம் கோடிக்கரைக்குச் சென்று நிலைமையை அவதானித்தார். அதனைத் துறைமுகமாக்கி விட்டால், இலங்கை-இந்திய வியாபாரம் நன்கு நடைபெறும் என்றும், அதன் பயனுக இருநாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்பு இன்னும்நெருங்கியதாக இருக்கும் என்றும் அவர் இப்போது அறிவித்திருக்கிறார்.

ஸ்ரீ பக்தவத்ஸலம் சிபாரிசு செய்துள்ள இவ்விஷயம் இதுசம்பந்தமான சென்னை அதிகாரிகளால் மிகவும் சிரத்தையுடன் அவதானிக்கப்படுகிறது.

சென்னை அரசாங்கம் கோடிக்கரை விஷயமாகத் தீர்மானித்தால் வடமாகாணத்துத் துறைமுகம் ஒன்றும் திறக்கப்படும்.

## வேதன உயர்வு

### யாழ்ப்பாணம் நகரசபைத் தீர்மானம்

யாழ்ப்பாணம் நகரசபையின் விசேஷ பொதுக்கூட்டம் ஒன்று சென்றவாரம் கூடியது. நகரசங்கத்தில் வேலைசெய்யும் லிகிதர்மார் உட்பட ஏனைய தொழிலாளிகளுக்கெல்லாம் இப்போதுள்ள நிலைமைக்கேற்றதாக வேதன உயர்ச்சி அளிக்கப்பட வேண்டும் என்று தலைவர் ஸ்ரீ பொன்னம்பலம் கூறினுர்.

கொழும்பிலும், இலங்கையின் ஏனைய பாகங்களிலும் நடக்கும் குழப்பங்களைக் கண்டபின்னரும், இங்குள்ள ஊழியர்களுக்கு வேதன உயர்ச்சி கொடுக்காமல் இருத்தல் முறையல்ல என ஸ்ரீ பொன்னம்பலம் கூறினுர்.

சபைத்தலைவர் ஆலோசனைப்படியும், ஸ்தல ஸ்தாபனப் பகுதியாரின் சிபாரிசுப்படியும், இந்த ஆண்டு ஏப்ரில்மாதம் தொடக்கம் நகரசபையில் வேலைசெய்யும் சகலர்க்கும் வேதன உயர்ச்சி அளிக்க வேண்டும் எனச் சபை தீர்மானித்தது. இப்படியான வேதன உயர்ச்சி அளிக்க 50,000 ரூபா செலவாகும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

1946ம் 1947ம் ஆண்டுக்குரிய வேதன உயர்ச்சிச்செலவினைச் சரிப்படுத்துதற்காக மத்திய அரசாங்கத்திடம் இருந்து 75 000 ரூபா கடன்பெறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 283,850 பவுண்

### சமாதான மகாநாட்டின்செலவு

சென்றவாரம் பாரிஸ்நகரத்திலே சமாதான மகாநாடு நடந்து முடிந்தது அல்லவா? அதன்பொருட்டு பிரான்சிய அரசாங்கத்துக்கு 283,850 பவுண் செலவாயது என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

இந்தத் தொகையில் 224,250 பவுண் மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு உணவு, அவர்களின் மோட்டார்ரதங்களுக்குப் பெற்ரோல் என்பவற்றிற் செலவாயது. மகாநாட்டில் கடமை பார்த்த லிகிதர்முதலிய உத்தியோகத்தர்களுக்கு வேதனமாக 59,000 பவுண் செலவு செய்யப்பட்டது.

மகாநாட்டுப்பிரதிநிதிகள் போக்குவரத்துச் செய்தற்கு 164 474 கலன் பெற்ரோல் செலவாயது 50 தொன் நிறையுள்ள கடுதாசி அவர்களின் உபயோகத்துக்காகக் கொடுக்கப்பட்டது.

மகாநாட்டுப் பிரதிநிதிகளாக 1334 பேர் சமூகமளித்தனர் இவர்களில் 300 பேர் பிரிட்டிஷ் பிரதிநிதிகள்; ருஷியப் பிரதிநிதிகள் 250 பேர்! அமெரிக்கப் பிரதிநிதிகள் 150 பேர்.

உலகில் உள்ள பத்திரிகைகளின் பிரதிநிதிகளாக 2038 நிருபர்கள் மகாநாட்டுக்குச் சமூகமளித்தனர்.

இப்படியெல்லாம் படாடோபத்துடன் நடந்த சமாதான மகாநாடு உலகில் சமாதானத்தை நிலைநாட்டுமா? இப்போதுள்ள நிலைமையில், சமாதானத்துக்கும், இம் மகாநாட்டிற் கூடியுள்ள வல்லரசுகளுக்கும் வெகுதூரம் என்பது மிகையல்ல.

## அநுராதபுர விபத்து

### ஒருவா உண்மையைக்கூறினுர்

அநுராசபுரத்துப் புகைரத விபத்துச் சம்பந்தமாக இப்போது 8பேர் சிறையாக்கப்பட்டிருக்கிறுர்கள்.

முதல் 4பேர்தான் பிடிபட்டனர். அவர்களில் அமலியாஸ் என்பவன் பொலிசார்க்கு உண்மையைக் கூறி, இதிற் சேர்ந்துள்ள மற்றவர்களையும் காட்டிக் கொடுத்துவிட்டான்.

விபத்து நடந்த இடத்துக்குச் சமீபமாகவுள்ள ஓர் காட்டில் அலவாங்கு முதலிய பல ஆயுதங்களைப் பொலிசார் கண்டு எடுத்தனர்.

சிறைப்பட்டவர்களில் மூவர், நுவரெலியா வாசியான பாலசூரிய என்பவரின் காரைச் சம்பவம் நடந்தவன்று வாடகைக்கமர்த்தினர் என்றும், அந்தக் காரில் அநுராசபுரத்துக்கு வந்து இந்த அக்கிரமத்தைச் செய்திருக்கலாமென்றும்இப்போது சொல்லப்படுகிறது.

### மின்னல்தாக்கி ஒருவர் மரணம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்புப் பகுதியில் புயலோடு கூடிய பெரும் மழை பெய்தது. ஹெந்தலையில் ஓர் வீட்டில் மின்னல் தாக்கியது. அதன் பயனுக ஒருவர் இறந்தார். வீட்டில் இருந்த ஏனையோர் கடுங்காயமுற்றனர்.

அங்கோடை வேலைநிறுத்தமும் ஒழிந்தது. வேலைநிறுத்தம் செய்த ஓவர்சியர் மார் முதலியோர் யாவரும் தாம் செய் [illegible] சென் [illegible] பினர்.

# கற்பனை கடந்த சோதி

(பண்டிதர் இ. திருநாவுக்கரசு
சைவப்பிரகாச வித்தியாசாலை, இணுவில்)

(முற்றொடர்)

### துன்பக் கற்பனை

மற்றப்புலவர் வாடிய முகத்துடன் நாடியிற் கைசேர்த்து நெட்டுயிரப்புயிர்த்துக் காட்சி கொடுத்தார். அவர் திருமுகத்தினைப் பரிசோதனை பண்ணினேம். பின் வருமாறு பொறிக்கப்பட்டிருந்தது. "ஆ! வளரொளி யிளவள ஞாயிறெனப் பெயர்பூண்டு உலகத்தவரைத் தட்டியெழுப்பிய சூரியன் "வெய்யோன் பாடுற்றான்" என வசைமொழி பகர்ந்து உலகோர் நகைத்துரைப்ப மேலைக்கடலுள்ளே குப்புற வீழ்கிறுன்;சூரியசந்திரர்க்கே தோற்ற மறைவுளதெனில்நிலையுடைப் பொருள் யாதோ? அதோ! வான்முகட்டினின்று இறகு தளர்வுற்று கூட்டில் வீழும் பருந்தினை நோக்குவாய். இது உலக வாழ்வில் எவ்வளவு துன்பங்களி லடிபடப்போகிறும் என்பதை உணரச்செய்கிறது: மீன் பிடிக்கச் சென்றுவந்த பரதவர் நிலையை ஒரு சிறிது நோக்குவோம். உணவின்றி உடையின்றிவலியின்றி மணல் மேட்டிலே பசித்துக் கிடக்கிறுர்கள். அதோ! புன்னையில் வளர்ந்த குருகினச் சேவல் பேடையையும் குஞ்சையும் பாதுகாக்கும் துன்பம்? அஃதோடு அலைமோதும் நீர்த்திவலை அடிக்கும் துன்பம்; பசித் துன்பம் என்பன தாக்குதலால் வருந்தி ஏதோ முணுமுணுக்கிறதே. இதோபார்! ஓர் பேதைப்பெண், காதற் கொழுநன் வலைப்பட்டு அவன் பிரிவிற் கிரங்கி வெளிக் கூறவும்மாட்டாது அவனது நட்பை மறக்கவும்மாட்டாது அவன் வந்துசென்ற தேர்வழி பார்த்துச் சென்றுகொண்டிருந்தாள். அலை சுவட்டினை அழித்தல் நோக்கிப் பிரிந்துபோனவர் வாராதொழிவது திண்ணம் என்பது கருதியோ அவர் தேர் வந்த சுவட்டையும் அழிக்கிறுய். கடைசி இதனையாவது பார்க்க விடமாட்டாயா? என்று பரிந்திரங்குகிறுளே. பாவம்!

மறுபுறத்தில்நோக்கினுர்: ஓர் தலைவி தன் தோழிக்கு முறைப்படுகிறுள். எவ்வாறெனில் என் வாட்டத்தின் காரணம் இனி மறைபடாது. யான் விரும்பிய என் தலைவர் இனியென்னை நினையார். யாம் அவர்மீது வியாச்சியம் தொடுக்கவும் முடியாது. ஏனெனில் ஏழையாகிய எனக்குச் சாட்சியம் செய்வாருமில்லை; ஏனெனிற் கண்டவரில்லை. ஆனுல் நின்றவரொருவருளர்; யாரெனில் ஒரு கிழ நாரையார். ஆகவே காதல் நோக்குணரார். யாம் பேசியதும் அவர் ஆணையிட்டதும் கேட்டேயிரார். ஏனெனில் உணவு வேட்கையால் ஒழுகுநீரில் வரும் ஆரல் மீன் தேர்ந்தவகையில் நின்றுர். ஆகவே சாட்சியம் சொல்லவோ தூது போக்கவோ ஒருவரும் துணையில்லை என்றுள். இதனைக் கேட்டதும்,

"யானென்செய்கோ! தானேகள்வன்
தானவன்மறப்பின் யானெவன்செய்
[illegible]ன்ன சிறுபசுங்கால [கோ
[illegible]ஒழுகுநீ ரரல் பார்க்கும்
குருகுமுண்டு தாம்மணந்தஞான்றே"

என்னும் செய்யுளினை எழுதி இறுதியிலே தனது இலக்ஷியத்தைக் குறிப்பிடுவாரானுர். யான் காட்சி பார்த்து மகிழவந்தேன். ஆனுல் அதற்கு மாருக அவை துன்பவாரியாகவே தோற்றமளித்தன ஆதலின்,

> இன்பம் இன்பம் இன்பம்
> இன்பத்துக்கோ ரெல்லைகாணிற்
> றுன்பம் துன்பம் துன்பம்

ஆகவே பிரபஞ்சத் தோற்றத்தில் மயங்குவதொழிந்த இன்பமும் துன்பமும் இல்லாதைகிய இறைவன், தன்னீழலை யடைவிப்ப ஆன்மாக்களுக்கு உணர்வூட்டற்காகவே உலகக் காட்சிகளை யாக்கினனென்பதனை உணர்ந்தேன் என்பதேயாம்.

இவ்விருவகைக் கற்பனை உள்ளம் படைத்தோரும்பிரபஞ்சத் தோற்றத்தையும் அதனைத்தோற்றுவித்த முதல்வனையும் உலகக்காட்சி கருவியாகக் கண்டு தெளிந்தோராவர். முந்தியவர் உலகம் இன்பத்தோடு அறிவு படிப்பிக்கிறதென்றுர். பிந்தியவர் உலகம் முழுதும் துன்பமயமே யென்றுர். இன்பத்தறிவும் துன்பத்தறிவும் இறுதியில் யாவற்றையும் ஆட்டுவிக்கும் ஒருவராகிய இறைவன் நிலையை உணரச்செய்தல் நோக்குவோமாக.

### அருங் கற்பனை

சிந்தனை உணர்வுமாத்திரம் படைத்தோர் காட்சிப் பொருள்களாகிய சடப் பொருளினை மாத்திரம் உணர்வார். இதனை இன்னெருவகையாகக் கூறுவோமாயின், முதல்கருப்பொருட்பிரிவுகளை மாத்திரம் காண்பார். கற்பனை யூற்றுடையவர்கள் சடப்பொருளுணர்வோடு சித்துப் பொருளுணர்வும் வாய்க்கப்பெறுவார். முந்திய வகையினரை விஞ்ஞான சாஸ்திரிகளெனவும், பிந்தியவர் இலக்கியமேதாவிக ளெனவும் நினைவூட்டுகிறேன். ஆனுல் அருங் கற்பனை இவ்விருவகை நிலைக்கும் அப்பாற்பட்டது அஃது சடம், சித்துப் பொருள்கட்கும் அப்பாலனதாய்ச் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைக் கண்ணுள்ளது, அதனை மணிவாசகப் பெருந்தகையார் "உரை உணர்விறந்து நின்று உணர்வதோ ருணர்வே" என மெல்லிய இனிய திட்பமானசொற்பொழிவுள் அடக்கிக் காட்டினுர். இதனையே தொல்காப்பியத்து இலக்கண உரை வகுத்த நச்சினுர்க்கினியார் "கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்து"ள் விரிப்பாராயினுர். "இல்லது இனியது நல்லது என நாட்டப்பட்டு உலகோரா னெடுத்துரைக்கப்பட்ட களவியல் வீடுபேறு பயத்தல்" அருங் கற்பனையுள்ளம் வாய்ந்தோர்க்கேயாம், இவர்கள் இறைவனைத் தலைவனுகவும் இறைவனேடு அன்புநிலையிற் பொருந்திப் பக்குவமடைந்த தம்மைத் தலைவியாகவும் பாவித்து உலகத்துறைவார்; அப்பொழுது உலகப் பிரபஞ்சம் இவர்களைத் தாக்கமாட்டாது இறைவனைக் கற்பித்துக் காணும் வேளையிலும் காணு வேளையிலும் அஃதே தியானமாகவே அவர்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஅ
ஐப்பசிமீ கசுஉ வெள்ளிக்கிழமை

## "சீரைத்தேடின் ஏரைத்தேடு"

இது எங்கள் தமிழ் மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியின் அமிர்த வாசக மென்பதைத் தமிழ்மக்க ளெவரும் அறிவர்; ஒருவன் உலகத்திலே எவ்வகையான குறைவுமின்றிச் சீர் சிறப்பாக வாழவேண்டுமென விரும்பினல் அவன் உழவுதொழிலைத் தேடிச் செய்யவேண்டுமென்பது தான் இதன் கருத்து; ஔவையார் திருவள்ளுவனர் எனப்படும் தமிழ் மூதறிவாளர் வாக்கு ஒருவனைக் குறித்துச் சொல்லப்படுவது போல் தொனிக்கினும், அது ஒருவனுக்கு மாத்திரமல்ல, ஒருத்திக்கு மாத்திரமல்ல, ஒரு சாதியினர்க்கு மாத்திரமல்ல, ஒரு நாட்டினர்க்குமாத்திரமல்ல, உலகத்திலுள்ள எவர்க்கும் நன்மை பயப்பதாகும்; ஒரு சாதியினராக, ஒரு நாட்டில்வசிக்கும் மக்களாக எவருக்கும் உணவும் உடையும் அவர்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதன வாகும்; பிரதானமான இந்த இரண்டு சாதனங்களையும் பெற்ற பின்னரே, எவர்க்கும் ஏனைய சாதனங்களைப்பற்றிய விசாரம் பிறக்கும்; உணவுக்கும் உடைக்கும் அழியாத வழிகண்ட நாடே சுவதந்திரத்தோடு கூடிய நாடெனத்தக்கது; அந்நாட்டில் வாழும் மக்களே சுயராச்சியஞ் செய்யும் மக்களாவர்; இந்த இரண்டுமில்லாத நாடு மானுட வாழ்க்கைக்குத் துணையான வேறு எப்பொருள்களை யுடையதாயினும், எவ்வகையான அழகோடும் சீர்திருத்தங்களோடும் பிறவளங்களோடும் பொருந்தியதாயினும், மாடமாளிகை கூட கோபுரம் பலவகை யரண், கல்விச்சாலைகளென்னு மிவைகளோடு காணப்படுகின்றதாயினும், கைத்தொழில் வியாபாரத் தொழில் இடையரூது நடைபெறப் பெற்றதாயினும்,இன்னபிறநன்மைகளோடு செறிந்ததாயினும், அந்த நாடு ஒருபோதும் சுயாதீனமுடைய நாடாகாது; அங்குள்ள மக்களும் சுதந்திரமுடைய மக்களாகார்.

முற்காலத்திலே, ஒருநாடு இல்லையேல் ஒருசாதியினர் செல்வத்தோடுமாத்திரங் கூடியிருந்தால், அச் செல்வமூலமாக ஏனையநாடுகளிலுள்ள எந்தப் பொருளையும் கிரயத்துக்குப் பெற்றுக்கொள்ளலாம். பண்டமாற்ருகவும் சம்பாதித்துக்கொள்ளலாம்; ஆனல் இப்பொழுது சிலகாலமாக மேலைத்தேச இராச்சியத்தினர்க்கிடையிலும், அவர்களைப் பின்பற்றிய கீழைத்தேச இராச்சியத்தினர்க்கிடையிலும், காலந்தோறும் பிணக்கும், சுயநல வேட்கை அதிகார வேட்கையென்னு மிவைகளும், இவை காரணமாகப் பலவருட காலம் நிகழும் பரந்தபோரும், அப்படிப் போர் நடப்பதனல் உயிர்ச்சேதம் பொருட்சேதம் நாடுகளின் நாச முதலாம் பல அனர்த்தங்களும் நேர்வதனல், வியாபாரம் பண்டமாற்று விவசாயம்என்னுமிவைகள் கிரமமாக நடைபெருதொழிய அந்நியநாட்டை உணவின் பொருட்டும் உடையின்பொருட்டும் நம்பியிருந்தவர்கள் பயங்கரமானபஞ்சத்திற்காளாகி மானமுங் கெடுகிருர்கள்; இதற்காகவே உணவுக்கும் உடைக்கும் வகைகண்ட நாடே சுயாதீனமான நாடெனவும் இப்படியான நாட்டில்வாழும் மக்களே சுயாதீனமான மக்களெனவும் மேலே எடுத்துக்காட்டினேம்.

சென்ற வருடம் வரையில் நடந்த உலகயுத்தத்தின் பயனுகப் பெருங்கஷ்டங்களையடைந்து நித்திய பஞ்சத்திற் புதைந்து கிடக்கும் நாடு, நாங்கள் குடியிருக்கும் இந்த இலங்கைதான் எனச் சொன்னல் விஷயமறிந்தவரெவரேனும் அதற்கு ஆட்சேபஞ் செய்ய மாட்டார்கள்; இவைகளுக்கெல்லாம் காரணமென்னவென்பதை இந்நாட்டிலுள்ள மக்கள் முந்தி ஒருபோது அறியாதிருந்தாலும், "பட்டாலறிவன் சண்டாளன்" என்ருங்கு, பெரும் பஞ்சப்பட்டு வருவதாகிய இந்தக் காலத்திலே இங்குள்ள மக்கள் சந்தேகமறத் தெளிந்து கொண்டார்கள். இங்குள்ள மக்கள் மாத்திரமல்லர், இம் மக்களைப் பரிபாலிக்கும் அதிகாரிகளும் அறிந்துகொண்டார்கள்; காரணங்களென்ன? இங்குள்ள மக்கள் வயிருர உண்ணுதற்குகாகிய நெல்லையும், உடுப்பதற்காகிய உடைக்குப் பிரதான மூலப்பொருளாயுள்ள பருத்தியையும் வேண்டிய அளவிற்கு ஆக்கிக் கொள்ளாமல், எந்தக் காலத்தும் இவற்றின் பொருட்டு அந்நிய நாட்டினரை நம்பியிருந்தமையேயாகும்;இந்த இலங்கையிலே நெல்லினையும் பருத்தியையும் பயிரிட்டு விருத்தி செய்தற்குப் போதிய நிலமுண்டோ என்ருல், உண்டு; தேவைக்கு மேலதிகமான நிலமுண்டென்று சொன்னலுந் தவருகாது; அப்படியானல் இனியேனும் விருத்தி செய்யலாந் தானே, "வித்தும் ஏரும் உளவாயிருப்ப எய்த்தங்கிருக்கும் பேதையும் பதரே" என்று சொல்வார்களே என ஆசங்கை நிகழ்த்தினல், நிலமுண்டு, ஆனல் வித்துமில்லை, ஏருமில்லை, விவசாயஞ்செய்வதற்குப் பணமும் ஊரவர்களிடத்தில்லை; அவர்களுக்குப் போதிய துணை செய்வாரும் அவர்களை ஊக்கப்படுத்துவாருமில்லை.

இந்த இலங்கையிலே விவசாயிகளாயுள்ளமக்களுட் பெரும்பாலார் மூலதனமற்ற ஏழைகளாயிருத்தலினல், விவசாயப் பகுதியதிகாரிகளே, மேற்படி விவசாயிகளுக்கு வேண்டிய துணைபுரிதலோடு அவ் விவசாயப்பகுதி யதிகாரிகள் நெல் பருத்தி [illegible] செய்கையை [illegible] பரந்த நிலத்திலே ஊக்கத்தோடு விருத்தியுண்டாகும்படிசெய்வித்தல் வேண்டும்; விவசாயப்பகுதி மந்திரியாக, அவருடையநிர்வாக சபை யினராக விவசாயவிருத்தியில் ஆர்வமுடையவர்களா யிருத்தல் வேண்டும். இவர்கள் சாதிபேதம் சமயபேதம் பாராட்டாது இலங்கைமக்க ளனைவருக்கும் விவசாயம் நன்மை பயப்பது பொதுவானதென்ற நோக்கத்துடன் கருமம் ஆற்றுதல் வேண்டும்; விவசாயத்தொழிலை விருத்தி செய்வதற்கு எந்தநாட்டிலே மக்களுளரோ, தொழிலாளர் கூலிக்காரருளரோ அவர்களெல்லாம் இங்கு வந்து தங்கி விவசாயத்தொழிலைப் பார்ப்பதற்கான ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்,

இந்த இலங்கையிலேயுள்ள விவசாயப்பகுதியார்விஷயத்தில் 'செட்டிக்கு வேளாமை சென்மத்துப் பகை' என்றவாருகக் காணப்படுகிறது, இந்த இலங்கையிலே கீழ் மாகாணத்திலும் வன்னிப் பகுதியிலும் நெல் பருத்தியென்னு மிவைகளை முற்காலத்துப் பயிரிட்ட, இனியும் பயிரிடக்கூடிய நிலம் இப்பொழுது பெரிய காடாகப் பரந்து கிடக்கின்றது; இந்தப் பரந்த நிலத்திற் பொருந்திய காட்டைத் திருத்தி வயலாக்கி நெல் பருத்தி செய்யும் கருமத்திற்கும் இலங்கையிலுள்ள தமிழ் சிங்களத் தொழிலாளருக்கும் வெகுதூரமென்பது அநுபவத்திற் கண்டதாகும், தென்னிந்திய கூலிகளே அந்தக் காலத்தில் இங்கே வந்து காடு செறிந்திருந்த மலைநாட்டைச் சிறந்த தேயிலை காப்பி ரப்பர்த் தோட்டங்களாகத் திருத்திப்பண்படுத்தி அயிரோப்பிய தோட்ட முதலாளிகளின் கீழ்ப் பல ஆண்டுகளாகத் தொழில்செய்து அவர்களுக்கும் இந்நாட்டு வருவாய்க்குந் துணைபுரிந்தவர்கள்; ஆனல் இப்பொழுதுள்ள விவசாயமந்திரியும் அவர் கூட்டத்தவர்களும் இந்த இலங்கை இந்தியரை வெறுத்துப் புறக்கணித் தொதுக்கி அவர்களுடைய நாட்டுக்கு அவர்களை மீண்டுபோகச் செய்யலாயினர்; இப்படிப்பட்ட மந்திரியும் கூட்டத்தவர்களுமா இந்நாட்டு மக்களுக்குப் போதிய உணவுப்பொருளையும் உடைப்பொருளையும் ஈட்டப்போகின்றனர்? இந்த நாட்டின் அரசியல் புநருத்தாரணஞ் செய்யப்பட்டா லொழிய, இந்நாடு உணவுப் பொருள் உடைப்பொருள்களுக்குப் பஞ்சப்படாமலிருக்கமுடியாது.

---

# உலகம்பல்விதக் கதை

(முற்றொடர்—122)

## "குலத்தளவேயாகுங் குணம்"

"அப்படியென்ருல் உங்களுக்கு அது சம்மதந்தானே" என்று வினவினன் இராமச்சந்திரன்; "என்னைச் சம்மதங் கேட்பதென்ன, எனக்கு அக்கன்னிகையை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ளுதல் பூரண சம்மதமாகும்; இப்போதைக்கு விவாகஞ் செய்வதில்லையென்ற நியதியோடிருந்த நான் இக்கன்னிகை இங்கு படிப்பிக்கும்படி வந்த நாள் தொடக்கம், பெண்ணின் பேச்சு வார்த்தை ஒழுக்கம் தன் கடமையிலுள்ள ஆர்வம், அதனைக் குறைவின்றிச் செய்வதனல் எழும் மகிழ்ச்சி, விநயமான ஊடாட்டம் நேர்மை தூய்மை முதலிய இவைகளையெல்லாம், பிறர் உணராவண்ணம் நான் என்னளவில் அவதானித்து வந்தேன்; இவைகள் என்னுள்ளத்தைக் கவர்தலாயின குலத்தளவேயாகுங் குணம் என்றவாறு இப்பெண் ஒரு உயர்குடியிற் பிறந்தவளென்பது என்னுள்ளத்திற் புலப்பட்டது; இவற்றையெல்லாம் யோசித்து இக் கன்னிகையை என் இல்லக்கிழத்தியாகக் கொள்ளின் என்வாழ்க்கை சிறக்குமென்று நிச்சயித்தேன்; மேலும் இப்பெண்ணை மணஞ் செய்யின் இப்பெண்ணும் நானும் இக்கலாசாலையிற்ருனே தாரமும் பதியுமாக விருந்து கல்விபயிற்றலாகுமென்பதையும் சிந்தித்தேன்: இவ்வாறு என் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டே அன்று உங்கள் வீட்டிற்கு வந்தேன்; அதன்பின் நிகழ்ந்தவைகளை, நண்பரே, நீரும் அறிவீர்; எனக்கு இக்கன்னிகையை மணஞ் செய்து தருவது உங்களனைவருக்கும் சம்மதமானல், பெண்ணுக்கும் உடம்பாடானல், தெய்வத்திற்கும் சித்தமானல் நான்ஏற்றுக்கொள்வதற்கு எவ்வகையான தடையுமில்லை; ஆனலும் ஒரு செய்தி சொல்ல விரும்புகிறேன்; என் பெற்ருர் என் விவாக விஷயத்தில் எனக்கு [illegible] ஒரு கன்னிகையை [illegible] ஆராய்ந்து தெரிந்து நிச்சயித்துக்கொண்டு, தங்களுக்குத் தெரிவித்தால் அது, தங்களுக்கும் பூரண சம்மதமாகுமென்று முந்தியே தெரிவித்திருக்கிருர்கள்; அப்படி அவர்கள் தெரிவித்திருந்தாலும், பெற்ற என் அருமையான அன்னை தந்தையரின் பூரண சம்மதத்தையும் ஆசியையும் பெற்றுக்கொண்டு நான் விவாகஞ் செய்தாற்ருன் எங்கள் இல்லறம் இனிது நடைபெறும். ஆனதால் இப்பொழுது நாங்கள் செய்துகொண்ட ஒழுங்கினைப்பற்றி இன்றைக்கே என் பெற்ருர்க்கு ஒரு கடிதம் எழுதுவேன்: நீங்கள் ஆகவேண்டிய ஆயத்தங்களைச் செய்யலாம்" என்றுசொல்லி முடித்தார் தலைமையாசிரியர்; 'அப்படியே செய்கின்றேம் மிகவுஞ் சந்தோஷம்" எனச் சொல்லிவிட்டுத் தலைமையாசிரியரிடம் விடை பெற்றுக்கொண்டு இராமச்சந்திரன் மீண்டான்.

### கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?

மீண்ட இராமச் சந்திரன் தன் வீட்டிற்குப் போதலின்றி, தன் அபிமானப் பிதா இருக்கும் இல்லத்திற் சென்று, அந்த நேரத்தில் பிதா வீட்டிலில்லையாக, இங்கிதமிருக்கு மிடத்திற்குப் போனன்; அங்கே இங்கிதமும் இரஞ்சிதமும் ஒருங்கிருப்பக் கண்டான்; அவனைக் கண்ட மாத்திரத்தே அவர்களிருவரும் எழுந்து ஒதுங்கி நின்ருர்கள்; நளனிடத்தில் அன்னத்தைத் தூதனுப்பிவிட்டு, பின் அது எப்போது மீண்டு வருமென ஆவலோடு எதிர்பார்த்து நின்ற தமயந்தியின் நிலையில், இங்கிதமும் இராமச்சந்திரன் வரவை எதிர்பார்த்த வண்ணம் அவ்வளவு நேரமும் ஆவலுடன் நின்ருளென்று சொல்லுதல் மிகையாகாது; தங்களிடம் வந்த இராமச்சந்திரனை இங்கிதம் ஆசனமுதவி உபசரித்து இருக்கச் செய்தாள்; அவனுடைய முகக் குறிப்பிலிருந்து அவன் சென்ற கருமம் அநுகூலமாகத்தான் இருக்கவேண்டுமென்று இங்கிதமும் இரஞ்சிதமும்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெர்மனி - அதனுடைய எதிர்காலம்

எழுதியவர்: ஸ்ரீ ஜ-த் தாரகநாத் தாஸ்
தொகுத்தவர்: ஸ்ரீதரன்

(முற்றொடர்)

முதலாவது உலகமகா யுத்தத்தில் முறியடிக்கப்பட்ட ஜெர்மனி முதலாளித்துவத்தைக் கடைப்பிடித்து, சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட ருஷியாவுடன் நேசபான்மை கொண்டு, தனது என்ஜீனியர்மாரையும், யுத்த நிபுணரையும் ருஷியாவுக்கு அனுப்பி அந்நாட்டை இன்றுள்ள நிலைக்குக் கொண்டுவர ஏதுவாகவிருந்தது என்பதைச் சென்ற கட்டுரையில் ஆசிரியர் விளக்கினுர். இதன்பின் ஜெர்மனி, பிரித்தாளும் சூழ்ச்சி முறையைக் கைக்கொண்டு தனது நிலையை உலக வல்லரசுகள் மத்தியில் உயர்த்தியது என்பதைக் கீழே ஸ்ரீ தாரகநாத்தாஸ் விபரிக்கிறுர்.

### மித்திரபேத தந்திரம்

ருஷியாவின் நேசபான்மையை ஓரளவில் சம்பாதித்துக்கொண்ட ஜெர்மன் அரசியல் வாதிகள் தங்கள் நாட்டத்தை - ஆங்கில பிரான்சிய நாடுகள்பால் திருப்பினர். அக்காலத்தில் ஆங்கில-பிரான்சிய நட்பு மிகப் பலமாக இருந்தது. தனது அயல் நாடாகிய பிரான்ஸ் பலமாக, வலிமை மிகுந்த ராணுவத்துடன் இருப்பது ஜெர்மனிக்கு வயிற்றெரிச்சலாகவிருந்தது. அதற்குத் துணையாக இங்கிலாந்தும் இருப்பதை எப்படிக் கெடுக்கலாம் என்பதை ஜெர்மன் இராஜ தந்திரிகள் சூழ்ச்சி செய்து பார்த்தனர். பிரானஸ், இங்கிலாந்து என்னும் இரு நாடுகளுக்குமிடையே மித்திரபேதம் செய்தால்தான் தங்கள்நாடு முன்னுக்கு வரும் என்பதை ஜெர்மன் இராஜ தந்திரிகள் உணர்ந்தனர். ஆனுல் அப்படியான மித்திரபேத முயற்சி இலகுவிற் கைகூடுங் காரியமல்ல என்பதை அவர்கள் கண்டனர். அவர்கள் முயற்சியைக் கைவிடவில்லை. ஜெர்மனியின் தந்திரத்தை பிரான்ஸ் ஊகித்துக்கொண்டு றூர் பிரதேசத்தில் தன் படையைக் கொண்டுபோய் நிறுவியது. இதனை பிரிட்டிஷார் எதிர்க்கவில்லை. இவ்விஷயத்தில் பிரிட்டிஷார் பிரான்சின் செய்கையைக் கண்டித்துத் தமக்கு அநுதாபங் காட்டுவதோடமையாது உதவியுஞ் செய்வர் என ஜெர்மனியர் காத்திருந்தது வீணுயது.

### ஆங்கில - அமெரிக்க ஆதரவு

முதலாவது மகாயுத்தம் முடிந்ததும், வெற்றிகொண்ட வல்லரசுகளுக்கு, அவை அடைந்துள்ள நட்டம் காரணமாக ஒவ்வொன்றுக்கும் பெருந்தொகைப் பணம் ஜெர்மனி நட்ட ஈடாக வருடந்தோறும் இறுக்கவேண்டுமென விதிக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம். கொஞ்சக் காலம் ஜெர்மனி இதனை இறுத்துக் கொண்டுவந்தது. பின்னர் அதனை மழுப்பித் தவணை யிட்டுக்கொண்டே வந்தது. இதற்கு அமெரிக்கரும் ஆங்கிலரும் ஆதரவளித்தனர். இது ஜெர்மனியின் இராச தந்திரிகளுக்கு மகத்தான வெற்றியாகும் என்க. ஆனுல் இந்த வெற்றியுடன் ஜெர்மனி எவ்வாறு திருப்தியடைய முடியும். வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை என்னும் பாராங்கல்லைத் தனது கழுத்திலிருந்து உதறித் தள்ளவேண்டுமானுல், பிரான்சியரின் ஆதரவு இருக்கத்தான்வேண்டும் என்பதை ஜெர்மனி உணர்ந்தது. அப்போது ஜெர்மனியின் பிரதம மந்திரியாயிருந்த டக்ரர் ஸ்ரெஸ்மன், இதன்பொருட்டு பிரான்சின் நட்பை நாடினுர். பிரான்சின் பிரதமர் பிறயன்டும் அவருமாகக் கூடி, ஜெர்மன்—பிரான்ஸிய நட்புக்கு வழி தேடினர். ஜெர்மனி, பிரான்ஸ் என்னுமிரு நாடுகளும் பரஸ்பரம் ஒற்றுமையாக இருக்கவேண்டும். அவை ஒன்றற்கொன்று சகலவிதங்களிலும் உதவி புரியவேண்டும் என்று இந்த இரு இராச தந்திரிகளும் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்க, இங்கிலாந்துக்குக் குடல்நடுக்கம் பிடித்தது.

### பிரிட்டிஷார் தந்திரம்

ஏற்கெனவே ஜெர்மனி ருஷியாவுடன் நட்புப் பூண்டிருக்கிறது. அது போதாதென்று பிரான்சுடனும் நட்புப்பூண்டு, இந்த மூன்று அரசுகளும்ஒன்றுசேர்ந்தால், தன்ஆதிபத்தியத்தின் நிலை என்னுகும் என்று இங்கிலாந்து துடிதுடித்தது. இந்த மூன்று வல்லரசுகளுக்குமிடையே பிரிவினை உண்டாக்க வேண்டுமென எண்ணியது. உடனே அதற்கு இருந்தாற்போல ஜெர்மனிமீது அநுதாப முண்டாயது. வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை ஜெர்மனி மீறுதற்கு உதவி புரிந்தது. அதன் பயனுக, குறித்த தவணைக்கு முந்தியே ஜெர்மனியிலிருந்த வல்லரசுகளின் படைகள் ஜெர்மனியைவிட்டு வெளியேறின.

### ஹிட்லர் தோற்றம்

ஐரோப்பாவிலே, பிரான்ஸ் இங்கிலாந்து என்பனவற்றின் உதவியைப் பெறுதலோடு ஜெர்மனி திருப்திப்படவில்லை. மெல்ல மெல்லவாக, இற்றலியையும் தனது நேசநாடாக்கினது. ஆசியாவில் ஜப்பானின் நேசபான்மையையும் சம்பாதித்துக் கொண்டு, மெல்ல மெல்லவாகத் தனது செல்வாக்கை சீனம், இந்தியா முதலாம் இடங்களிலும் பரப்பத் துணிந்தது ஜெர்மனி ஒதுங்கி யிருந்த காலம் போய்விட்டது. தாமும் ஓர் வல்லரசினர்தாம் என ஜெர்மனியர் உணரத் தொடக்கினர். தாம் யுத்தத்திலே தோல்வியடையவில்லை என்ற ஓர் மனோபாவம் அவர்களுக்கிடையே ஏற்பட்டது. உலகில்தான் இல்லாவிட்டாலும் மத்திய ஐரோப்பாவிலே தம் செல்வாக்கையும் அதிகாரத்தையும் மீண்டும் நிலைநாட்டவேண்டுமென ஜெர்மனியர் அங்கலாய்த்து நின்றனர். இப்படியான ஓர் சூழ்நிலையில்தான் ஜெர்மன் அரங்கத்திலே ஹிட்லர் தோற்றினுர். பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற ஜெர்மன் அபிலாஷைகளே ஹிட்லரின் தோற்றத்துக்கு மூலகாரணம் என்று கூறினும் பொருந்தும்.

### ஹிட்லரின் லட்சியம்

தான் இழந்துபோன நாடுகளை மீண்டும்கைப்பற்றவேண்டுமேயானுல் போலந்துக்குக் கொடுக்கப்பட்ட நிலப்பாதையைச் சிதறடிக்க வேண்டுமானுல், போதிய ராணுவ வலிமையும் உலக இராசதந்திரிகளின் அநுதாபமும் ஜெர்மனிக்கு வேண்டும் என்பதை ஹிட்லர் உணர்ந்தார். ஜெர்மனியைக் கூறுபோட்டு, ஆஸ்திரியா என்றும், பிறஷியா என்றும் இப்படிப் பலவிதமாக வல்லரசுகள் பிரித்தனர். இந்தப் பிரிவினையெல்லாம் ஆகாது ஜெர்மனி ஒரே தேசமாகவிருக்க, ஜெர்மன் மக்கள் அனைவரும் பாகுபாடின்றி ஒன்ருக வாழவேண்டும் என்பதை உணர்ந்த ஹிட்லர் இரத்தம் சிந்தாமலே தனது லட்சியத்தைச் [illegible]

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## வீரத் தமிழா! வீறு கொண்டெழுக

தேசிய வீரக்கவிஞர்
நாமக்கல்: ராமலிங்கம்பிள்ளை

தமிழன் என்று சொல்லடா—தலைநிமிர்ந்து நில்லடா!

சித்திரத்தில் மிகஉயர்ந்த சிற்பநூலின் அற்புதம்
சின்னச்சின்ன ஊரிற்கூட இன்றுமெங்குங் காணலாம்
கைத்திறத்தில் ஈடிலாத கல்விதந்த தமிழர்நாம்
கைநெரித்து வேலையின்றிக் கண்கலங்கி நிற்பதேன்? (தமிழ)

எண்ணமற்று விசனமற்று எங்கும்செல்வம் பொங்கவே
எந்தநாளும் ஆடல்பாடல் எழிலரங்கம் ஓவியம்
பண்ணமைந்த குழலும்யாழும் பக்கமேளம் யாவையும்
பாருக்கீந்து மகிழ்ச்சியின்றி நாமிருத்தல் பான்மையோ! (தமிழ)

விண்மறைக்கும் கோபுரங்கள் வினைமறைக்கும் கோயில்கள்
வேறுஎந்த நாட்டிலுண்டு வேலையின் விசித்திரம்
கண்ணிறைந்த காவனங்கள் கனிகள்மிக்க சோலைகள்
கண்டபோது பண்டையெங்கள் நாகரீகம் காட்டுமே (தமிழ)

மனிதவாழ்வில் இன்பமென்று சொல்லுகின்ற யாவையும்
மற்றவாழ்வில் உதவுமென்று நம்புகின்ற ஞானமும்
தனிமையான முறையில்யார்க்கும் தந்ததிந்தத் தமிழகம்
தட்டிடாது தெய்வமின்னும் கிட்டிநம்மைக் காக்குமே (தமிழ)

# ஈப்போ கொலை வழக்கு

## கோலாலம்பூர்க்கு விசாரணை மாற்றம்

மலாய்நாடு ஜப்பானியர் ஆக்கிரமிப்பில் இருந்தபோது, விக்ரர் பேரீரா என்னும் ஒருவரைக் கொலைசெய்தார் என்றும், அதற்குதவிபுரிந்தார் என்றும் முறையே தம்பித்துரை, ஜயசூரிய என்னும் இருவர் குற்றம்சாட்டப்பட்டனர்.

இந்த வழக்கு ஆரம்பத்தில் விசாரணைக்கு வந்தபோது, மலாய்நாட்டுராணுவநீதிஸ்தலம் அவர்களிருவரையும் குற்றவாளிகள்எனக்கண்டது. இத்தீர்ப்புச்சரியல்ல என்று எதிரிகள் மனுச்செய்ததைத்தேசாதிபதி அங்கீகரித்து இவ்வழக்கைப் புனர்விசாரணைசெய்ய வேண்டும் எனக் கட்டளையிட்டார்.

ஈப்போவில் எதிரிகள் விசாரணை செய்யப்படவேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்ததை ஆட்சேபித்து எதிரிகள் மனுச்செய்தனர். ஈப்போவிலே இந்த வழக்கு விசாரணை செய்யப்படின், எதிரிகளுக்கு நீதி சரியானபடி வழங்கப்படுதல் முடியாது என்றும், ஆனபடியால் கோலாலம்பூர்க்குவிசாரணையை மாற்றுதல்வேண்டும் எனவும், மலாய்நாட்டு பிரதம நீதியரசர்க்கு மனுச் செய்யப்பட்டது. இந்த மனு சென்ற 29-10-46 காலை விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகளுக்காக பரிஸ்ரர் R. P. S. இராஜசூரிய, E. E. C துரைசிங்கம் என்பவர்கள் ஏற்பட்டு வாதித்தனர். விசாரணை முடிவில் நீதியரசர் அவர்கள் கூறியதைச் சரியெனக் கண்டு, குறித்த விசாரணையை ஈப்போவில் நடத்தாது, கோலாலம்பூரில் நிகழ்த்தவேண்டும் என்று தீர்ப்பளித்தார். விசாரணை இம்மாதம் 25-ம் திகதி நிகழும்.

## ஏன் தாமதம்?

### கணக்குப்பரிசோதனை அறிக்கை

இலங்கைக் கணக்குப் பரிசோதனை அறிக்கையை ஏன் வெளியிடவில்லை? இலங்கை "சிவில் டிபென்ஸ்" என்னும் ஊர்ப் பாதுகாப்புப் பகுதி அதிகாரியின் செலவுகள் சம்பந்தமான அறிக்கை ஏன் இன்னும் பகிரங்கமாகவில்லை என்று மிஸ்ரர் தோமஸ் றீட் என்பவர், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் குடியேற்றநாட்டு மந்திரியைக் கேட்டார்.

குறித்த அறிக்கைகள் செப்டெம்பர் மாதம் 26-ம் திகதியும் அக்டோபர் மாதம் 3-ம் திகதியும் பிரசுரிக்கப்பட்டுவிட்டன என்று குடியேற்றநாட்டு மந்திரி பதிலிறுத்தார்.

மிஸ்ரர் றீட்: குறித்த இந்த அறிக்கைகளைப் பிரசுரிப்பதில், மிதமிஞ்சிய தாமதம் ஏற்பட்டது என்பதனையும். அப்படியாக ஏன் தாமதம் ஏற்பட்டது என்பதையும் மந்திரி இச்சபையிலே விளக்குவாரா?

கு. மந்திரி: இந்த அறிக்கை விஷயமாகவுள்ள பொதுப் பிரச்சினையை தேசாதிபதி என்னுடனும், இலங்கை நிதிக்காரியதரிசியுடனும் கலந்தாலோசிக்கவேண்டி ஏற்பட்டது. இதனுலேயே இத்தாமதம் ஏற்பட்டது.

இவ்வளவில் மிஸ்ரர் றீட் இவ்விஷயத்தைக் கைவிட்டார்.

## உதவி வித்தியா கர்த்தர்

### ஸ்ரீ அருள்நந்தி நியமனம்

அரசாங்கப் போதனுகல்லூரிப் பிரதமாசிரியர் திரு கே எஸ் அருள்நந்தி அவர்கள் பிரதி வித்தியாகர்த்தராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறுர் என்று அறிகிறோம். இவருடைய நியமன விஷயமாக வித்தியாகர்த்தருக்கும், கல்வி நிருவாக சபைக்குமிடையே அபிப்பிராய பேதம் நிகழ்ந்தது ஞாபகமிருக்கலாம்.

வித்தியாகர்த்தர், பிரதி வித்தியாதிகாரி பதவிக்கு மிஸ்ரர் R. J. F. மெண்டிஸ் என்பவரைச் சிபாரிசு செய்தார். ஆனுல் கல்வி நிருவாகசபை, அவருடைய சிபாரிசை ஏற்காது, திரு. அருள்நந்தியைச் சிபாரிசு செய்து, பகிரங்க உத்தியோகத்தரை நியமிக்கும்சபைக்குச் சமர்ப்பித்தது. குறித்தசபை, கல்வி நிருவாகசபையின் சிபாரிசினையே ஏற்றுக்கொண்டு திரு. அருள்நந்தி அவர்களையே நியமிக்கலாயிற்று

திரு அருள்நந்தி ஓர் எம். எஸ் ஸி. பட்டதாரி. கல்வி விஷயமாக இங்கிலாந்திலேயே அநுபவம் பெற்றவராவர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### லீகர்களின் சூழ்ச்சி

முஸ்லிம் லீக் மந்திரிமார் இடைக்கால அரசாங்கத்திற் பங்குபற்றுவதற்கு முதல், ஓர் பெரும் அரசியல் நெருக்கடியை உண்டுபண்ண முயற்சித்தனர் என்று தெரிகிறது. பிரதானமான மந்திரப் பதவிகளில் ராணுவத்தையும், உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்கும் பதவிகளையும் தம்மிடமே தரவேண்டும் என்று அவர்கள் வாதித்ததாகத் தெரிகிறது, இராஜப்பிரதிநிதி இவ்விஷயமாகப் பண்டிதர் நேருவுடன் யோசித்தார். இராணுவ மந்திரியாக, ஓர் சீக்கியர் இப்போது இருக்கிறார். அவர் அதற்கு மிகவுந் தகுதி வாய்ந்தவர். இன்னும் முஸ்லிம் லீக்கினர் தங்களுடைய பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும், வங்காளத்திலே வகுப்புச் சண்டைகளைக் கிளப்பிவிட்டனர். அந்தக் கலவரத்தை யடக்க, வங்காளத்தில் உள்ள லீக் மந்திரிகளால் முடியவில்லை இந்த லீக் மந்திரிகளே கலகங்களைத் தூண்டிவிட்டனர் என்று உலகிலே ஓர் அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. இப்படியான ஓர் நிலையில் உள்நாட்டு ஒழுங்குகளை நிலைநாட்டும் பொறுப்பை லீக் மந்திரிகளுக்குக் கொடுக்கமுடியாது என்று பண்டிதர் நேருவும் அவருடைய மற்றும் சகாக்களும் கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டனர். இந்த விஷயத்தில் இராஜப்பிரதிநிதி யதேச்சாதிகாரக் கருமம் ஆற்றி லீகர்களுக்கு அவர்கள் விரும்பியபடி மந்திரப் பதவிகளை வழங்குவாரேயானால், தாமும் தம் சகாக்களும் இடைக்கால அரசாங்கத்தை விட்டு நீங்கவேண்டியும் ஏற்படலாம் என்று பண்டிதர் நேரு வேவலுக்கு அறிவித்தார். இதன் பின்னரேயே வேவல் நிலைமையை உணர்ந்து, லீகர்கள் விரும்பியபடி பதவிகளைத் தரமுடியாது என்று ஒழிப்பு மறைப்பின்றிக் கூற, அவர்களும் "மிஞ்சினால் கெஞ்சு" என்ற நியாயத்தின்படி வழிக்கு வந்தனர்,

●

### என்ன நோக்கம்

நாங்கள் அரசாங்கத்தை நடத்துவதில் ஒத்துழைப்போம்என்றுவெளியில் லீகர்கள் சொல்லுகிறார்கள். அப்படி ஒத்துழைப்பது என்னும் உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்டுதான் வேவல் இவர்களை இடைக்கால அரசாங்கத்திற் சேர்த்தார்; ஆனால் முஸ்லிம் லீக் பிரமுகர்களான லியாகத் அலிகான், கஸ்னுபர் அலிகான் என்பவர்கள் சென்றவாரம் கூறியுள்ள சில கூற்றுக்களை ஊன்றி நோக்கும்போது இவர்களின் நோக்கத்தில் சந்தேகம் பிறக்கவே செய்கிறது வெளியிலிருந்து தங்கள் 'புலுடா'க்கள் வாய்க்காததைக் கண்டு உள்ளுக்குள் நுழைந்து கெடுக்கத் துணிந்திருக்கிறார்களோ என்றும் எண்ணவேண்டியிருக்கிறது. உதாரணமாக, சென்ற ஞாயிற்றுக்கிழமை பண்டிதர்நேரு பிரதமர்என்ற நியதியில், தம் வீட்டில் நிகழவிருக்கும் மந்திரசபைக் கூட்டத்துக்கு வரும்படி மந்திரிகளுக்கு அழைப்பு விட்டிருந்தார். லீகர்கள்போகவில்லை. சம்பிரதாயமாவது! கத்தரிக்காயாவது! சுதந்திர அரசாங்கமாவது! என்று இவர்கள் சொல்லிக்கொண்டு தாம் இராஜப்பிரதிநிதிக்கு மாத்திரமே பொறுப்பன்றி, பண்டிதர் ஜவஹர்லாலுக்குப் பொறுப்பல்ல என்று இந்த லீகர் சட்டம் பேசுகிறார்கள். எப்படியாவது வெருட்டிக் கருமம் பார்க்கலாம் என்பதே இவர்களின் நோக்கம். ஆனால் இப்போது உலகம் போகும் போக்கிலே ஒட்டவந்த பிடாரி ஊர்த் தெய்வத்தைத் துரத்த முடியாது.

●

### வங்காள அக்கிரமங்கள்

கீழ்வங்காளத்து அக்கிரமங்கள் இன்னும் ஒழிந்தபாடில்லை. பிரதமமந்திரி ஷுராவர்த்தியும் தேசாதிபதியும் ஆகாசவிமானமூலம் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச்சென்று பார்வையிட்டு சில நூற்றுக்கணக்கானவர்களே இந்தக்கலகத்தாற் துன்பப்பட்டனர் என்று மூடி மறைக்கின்றனர். ஆனாற் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டு விட்டனர். ஹிந்துப் பெண்களை முஸ்லிம் காடையர் கற்பழிக்கின்றனர். மானபங்கப்படுத்திப் பலவந்தமாகத் தங்கள் மதத்துக்கு மாற்றுகின்றனர் ஹிந்துப்பெண்களில் விவாகமானவர்களைக் கீழேதள்ளி அவர்களின் குங்குமத் திலகத்தை இந்த எளிய முஸ்லிம் காடையர்—பெண்ணினத்தைச் சீரழிக்கத்துணிந்த பதர்கள்—தங்கள் கால் பெருவிரல்களினால் அழித்துப் பின் இஸ்லாமிய மதத்துக்கு மாற்றுகின்றனர் என்று பல செய்திகள் கூறுகின்றன. அன்று துரியோதனன் சபையில் திரௌபதி நின்ற நிலையில் இன்று வங்காள ஹிந்துக்கள் தவிக்கிறார்கள்! ஹிந்துஸ்தானம் துடிக்கிறது! வங்காளப் பிரதமர் ஷுராவர்த்தி நெஞ்சிலுரமற்றுப் பேடியாகநிற்கிறார். சாந்தம் சாந்தம் என்று காந்திமுனிவர் போதிக்கிறார். ஆனால் 30 கோடி இந்துக்களும் நினைத்தால் என்ன நடக்கும் என்பதை இந்த ஷுராவர்த்தி இப்போதுள்ள அகம்பாவத்தில் நினைக்கிறார் இல்லை.

●

### கல்கத்தாக் கொந்தளிப்பு

கல்கத்தா நகரங்களில் ஹிந்துக்கள் பெரும்பான்மையினராக விருக்கிறார்கள். கீழ்வங்காளத்திலே இந்த அக்கிரமங்கள் நடக்க, கல்கத்தாவிலும் பொல்லாத அக்கிரமங்கள் மீண்டும் தலைதூக்கிவிட்டன. வீடு வாசல்கள் எல்லாம் தீக்கிரையாக்கப்படுகின்றன. கண்ட நின்ற இடமெல்லாம் கொலை! இந்த அழகிலே லீக் தர்பார் வங்காளத்தில் நடக்கிறது.

●

### மௌலானா அசாத் கண்டனம்

கிழக்கு வங்காளத்தில் நிகழும் குரோதச் செய்கைகளை மௌலானா அசாத் ஆணித்தரமாகக் கண்டிக்கிறார். இவரைவிட அநேக முஸ்லிம் லீக்கினரும் காடையர் கிருத்திரமங்களைக் கண்டிக்கிறார்கள். இவர்கள் எப்படிக் கண்டித்தும் என்ன? வங்காளத்து லீக் அரசாங்கம் அசைந்தால்தானே! வங்க அரசாங்கம் இப்படியெல்லாம் கோழைத்தனமாக இருப்பதைக்கண்டு இராஜப் பிரதிநிதி என்ன செய்கிறார்? நாட்டிலே அமைதியை நிலைநாட்டுவது அவருடைய பொறுப்பு அல்லவா? ஏன் இவர் மவுனம் சாதிக்கிறார் என்ற ஓர் பெரிய ஆசங்கை இப்போது எழுகிறது! பிரிட்டிஷ் இராஜதந்திரம்! இதுதான் இந்த ஆசங்கைக்கு மறுமொழி! பிரிட்டிஷ் படைகள் இல்லாவிட்டால் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரையொருவர் கொன்றுவிடுவர் என்ற "உண்மை"யை உலகுக்குக் காட்டவேண்டாமா?

---

## யாழ்ப்பாணம் மின்சாரநிலையம்

யாழ்ப்பாணம் மின்சார நிலையத்து என்ஜினைச் செலுத்துபவரை, யாழ்ப்பாணத்தினின்றும் விலக்கி, வேறெங்காவது மாற்ற வேண்டும் என ஸ்தல ஸ்தாபனப்பகுதியாரைக் கேட்டுக்கொள்வதென்று,சென்றவாரம்கூடியயாழ்ப்பாணம்நகரசபையின் விசேஷகூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை மின்சாரப்பகுதித் தலைவர் நகரசபை[illegible] தம் எழுதியி[illegible] துறையில் நிறுவப்பட விருக்கும் சீமந்துத் தொழிற்சாலையில் ஓர் மின்சாரயந்திரம் அமைக்கப்படுமென்றும், அந்தயந்திரத்திலிருந்து யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுக்கும் மின்சாரம் உதவ முடியும் என்றும் மேற்படிதலைவர் அக்கடிதத்திற் குறிப்பிட்டார்.

அப்படியாக மின்சாரம் உதவப்படுங் காலத்திலே, அந்த மின்சார நிலயத்திலிருந்து, யாழ்ப்பாணநகரம் முழுவதுக்கும் தேவையான மின்[illegible] பெறவேண்டும் [illegible]கம் தீர்மானித்தது.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### வெள்ளி நவம்பர் 1

காலை 7-15 கிராமம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் பி கல்யாணசுந்தரம் பாட்டு 8ஆங்கிலத்தில்செய்திகள் 8.15 திருச்சி வாத்தியகோஷ்டி 8.30 எம் ஆர் குஞ்சம்மாள்பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கே ரங்கையா பாகவதர் பாட்டு 2தமிழில்செய்திகள 2-05 எஸ் கே ரங்கையபாகவதர் பாட்டு 2.15கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

மாலை: 5 எஸ் பி கல்யாணசுந்தரம் பாட்டு 5.40 குரான்-ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 அருப்புக்கோட்டை எஸ் கணேசபிள்ளை நாகஸ்வரம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 வாத்தியார் விசாரம் 8 முன்னேற்றம் 8.15 எம் ஆர் குஞ்சம்மாள் பாட்டு 8-30 அருப்புக்கோட்டை எஸ் கணேசபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தத்தி இசை 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் 9.45 நமது சங்கீதம் 10.30 முடிவு.

### சனி நவம் 2

காலை: 7-15 கிராம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 திருப்பாப்புலியூர் ஆர் வெங்கடராமய்யர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கோமதி சங்கர நாராயணன் பாட்டு 8-30 உலக விவகாரங்கள் 8.45 காலை இசை 9 முடிவு.

1 திருப்பாப்புலியூர் ஆர் வெங்கடராமய்யா வயலின் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வகலாசாலைகளுக்கு 2-15 கோமதி சங்கரநாராயணன் பாட்டு 2 45 முடிவு.

மாலை: 5 டி எஸ் லோகநாதன் பாட்டு 5-40 திருமொழி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி எஸ் லோகநாதன் பாட்டு 7.15 மாற்றி அமைத்தல் 7.30 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளாடி (எம் எம் தண்டபாணி தேசிகர் பாட்டு) 9 ஆங்கிலத்தில் செய்திகள்9.15 நாட்டியகீதம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9.45 இசைவேளை 10.30 முடிவு.

### ஞாயிறு நவ 3

காலை 71-5 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 ஸி. சுந்தர சாரதாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருவிழிமிழலை சகோதரர்கள் நாகஸ்வரம் 8-30 ஸி ஏ நாராயணன் பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் 12-30 யார் இவர்? 12-45 மோஹினி பாவை 1 மணியல 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2-05 மின்னிசை 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 எம் கே கனகாம்பாள் வீணை 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7ஸி சுந்தரசாரதாம்பாள் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45மதுவிலக்கு 8 ஸி ஏ நாராயணன் பாட்டு 8.30 எம், கே கனகாம்பாள் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தஞ்சாவூர் ஆர் நடராசன் வயலின் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 கே ஸி திபாகராஜன்பாட்டு 10.30 முடிவு.

### திங்கள் நவ 4

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 எஸ் சிவசுப்பிரமணிய பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8.30 டி ஆர் துரைவேலு பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி ஆர் துரைவேலு பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 டி ஆர் துரைவேலு பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு2-45 முடிவு.

மாலை 5 எஸ் சிவசுப்ரமணியபிள்ளை நாகஸ்வரம் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஸ்ரீ வள்ளி 7-15 தாளவாத்ய கச்சேரி 7-30 தமிழில் செய்திகள் 7-45 செம்மை வைத்தியநாத பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 கே ஜே ஜோஸ் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10-05இசைக்கதம்பம் 10-30 முடிவு,

### செவ்வாய் நவ 5

காலை 7-15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30ஆர் சுப்ரமணியன்பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 ராஜம் புஷ்பவனம் 8-30வேதாரண்யம் எம் கனகாம்புஜம் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 வேதாரண்யம் எம் கனகாம்புஜம் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 வேதாரணயம் எம் கனகாம்புஜம் புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 கே ஆம்பூர் அமிருதவல்லி, சுந்தாவல்லி பாட்டு, 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 ஒருநாள் பரிசு 7.30 தமிழில் செய்திகள் 7.45 ஜக்-உஸ்-ஸஹா 7.55 துதிப் பாடல்கள் 8 ஆம்பூர் அமிருதவல்லி சுந்தரவல்லி பாட்டு 8 30 ஆர் சுப்ரமணியன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 குறவஞ்சி பாட்டுகள் 9-30லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9.45 நீங்கள்கேட்டவை 10.30 முடிவு

## ஜெர்மனி அதனுடைய எதிர்காலம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

ற்சி சித்தியாக வேண்டுமானால், ஜெர்மனியிடம் சிறந்தராணுவமும் ஏனைய யுத்த தளபாடங்களும் சம்பூரணமாக இருக்கவேண்டும் என்பதைக் கண்ட ஹிட்லர், இங்கிலாந்தின் உதவியுடன் ஜெர்மனிய ராணுவத்தை அதிகரிப்பிக்க, அங்கே கட்டாய ராணுவ சேவையை அமுலுக்குக் கொண்டு வந்தார், முந்தி விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மாற்றி, இரகசியத்தில் ஜெர்மனியை ஓர் பெரும் ஆயுதசாலையாக்கினர். இவை எல்லாம் பிரிட்டிஷார்க்கு நல்லாய்த் தெரியும், முந்திய உடன்படிக்கைக்கு இது விரோதமானவை என்பதை பிரிட்டிஷார் அறிந்தும் கண்சாடையாக விட்டுக்கொடுத்தனர், ஏன்? ஓர்பக்கம் பிரான்ஸ் மிகப் பராக்கிரமம் வாய்ந்ததாகவிருந்தது. மற்றப்பக்கத்திலே சோவியத் ருஷியா தன் படைப் பலத்தினால் உலகை நடுங்கவைக்கும் நிலைமையில் வந்துவிட்டது இந்த இரண்டு நாடுகளினதும் கொட்டத்தை அடக்க வேண்டும் என்றால், அவற்றுக்கிடையேயுள்ள நாடு பராக்கிரமம் பொருந்தியதாக விருக்கவேண்டும், அந்நாடு தான்ஜெர்மனி, இதனை இங்கிலாந்து நன்குணர்ந்து ஜெர்மனிக்கு ஓரளவு ஊக்கமும் கொடுத்தது, ஜெர்மனி, ருஷியா, பிரான்ஸ் என்னும் இந்த மூன்று நாடுகளும் ஒருங்கு சேராமல் இருக்கவேண்டும் என்பதே இங்கிலாந்தின் அவா. ஜெர்மனியும் பிரான்சும் ஒன்றுபட்டாலும் சரி, ஜெர்மனியும் ருஷியாவும் ஒன்றுபட்டாலும் சரி, தனக்கு ஆபத்துத்தான் என்பதை உணர்ந்துள்ள இங்கிலாந்து, ஜெர்மனியை ருஷியா, பிரான்ஸ் என்னும் இரண்டு நாடுகளினின்றும் பிரித்துத் தனக்கு அநுதாபமாக வைத்துக்கொள்ள நினைத்தது. இந்தக் கொள்கையினையே ரம்சே மக்டோனல்டும், நெவில் சேம்பர்லேனும் அநுட்டித்து வந்து 1938-ம் ஆண்டில் மியூனிச் உடம்படிக்கையைச் செய்து, ஜெர்மனியின் ஆதிபத்திய ஆவலை பூர்த்திசெய்ய முன்வந்தனர், (வரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

யூகித்தனர்; இராமச்சந்திரன் தான் சென்ற விஷயத்தையிட்டுச் சில நிமிஷம் யாதும் பேசாமலிருந்தமையினால், இரஞ்சிதம் அறிய ஆவல் மிகுந்தவளாய், இங்கிதத்தைப் பார்த்த வண்ணம், "சென்ற கருமம் எப்படியென்று உங்கள் அண்ணரைக் கேட்கலாமே, தங்காய்" என்று சொல்ல, இங்கிதம் நாணமுற்றுளாய் நிலத்தைப் பார்த்தவண்ணம் நிற்க, "கேட்பதென்ன, பூரண அநுகூலந்தான்" என்றான் இராமச்சந்திரன்; அவன் பின்னரும் அவர்களை மகிழ்ச்சியுடன் பார்த்து 'தலைமை யாசிரியருக்கு இந்தச் சம்பந்தம் பூரண சர்மதம்; தாம் இவ்விஷயமாகத் தம் பெற்றோருக்கும் உடனே கடிதமெழுதுவதாகச் சொன்னார்; கல்யாணத்திற்கு ஆக வேண்டிய ஆயத்தங்களைச் செய்வது நல்லதென்று எனக்குச் சொன்னார்; ஆண்டவன் கிருபையால் எல்லாம நன்மையாக நடைபெறும்; இனி நாங்கள் செய்யவேண்டிய ஆயத்தங்களைச் செய்யவேண்டும்" என்றான்; "தலைமையாசிரியர் பூரண சம்மதப்படாமல் முடியுமா? கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா? எங்கள் அருமைத் தங்கையை வாழ்க்கைத் துணையாகக் கொள்ள எல்லாருக்குங் கிடைக்குமா" என்று பாராட்டிச் சொன்னாள் இரஞ்சிதம்; "அக்கா, அப்படிச் சொல்லாதீர்கள்; அவர்களும் மேலான நிலைமையில் உள்ளவர்கள்தாமே" என்று இரஞ்சிதத்தை நோக்கி இங்கிதம் சொன்னாள்; இரஞ்சிதம் புன்னகையுடன் "இப்பொழுதே அவரைப்பற்றிக் குறைசொல்ல, உமக்கு ஆத்திரம் பிறக்கிறதென்றால், விவாகம் நிறைவேறிய பின் நாங்கள் அவரைப் பற்றி ஏதுங் குறைசொன்னாற் பழியாய் முடியும் போலிருக்கிறது' என்று சொல்ல, "என் அருமையான அக்காவுக்கு எந்த நேரமும் வேடிக்கைதான்" என்று நாணம்மீதூர நின்றாள் இங்கிதம்; இவற்றை யெல்லாம் அவதானித்துக்கொண்டிருந்த இராமச்சந்திரன் "பெண்களுக்கு எப்பொழுதும் தங்களைப்பற்றிப் பெரிய எண்ணந்தான்" என்று சிரிப்புடன் சொன்னான்; "பெண்களுக்குத்தான் பெரிய எண்ணம், ஆடவர்களிடத்தில் அப்படியான எண்ணம் இல்லை போலும் தங்கைச்சி" என்று இங்கிதத்தைப் பார்த்தபடி பன்னினாள் இரஞ்சிதம்; "அக்கா, நீங்களிருவரும் நேரிற்பேசுங் காலம் வரும்வரை இரு பக்கத்தாலும் எனக்குத்தான் இடிபோலும்" என்று நகையரும்ப மொழிந்தாள் இங்கிதம்; "அதிலொன்றுமில்லை, தங்கைச்சி, வேடிக்கையாகப் பேசுகிறேன்" என்றான் இராமச்சந்திரன்; இதற்கிடையில் வெளியே சென்றிருந்த தன் அபிமானப்பிதா வீட்டுக்கு மீண்டு வந்துவிட்டாரென்பதையறிந்து இராமச்சந்திரன், அவ்விருவரிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு தலைவாசலிலிருந்த தன் பிதாவைக் கண்டு செய்தி முழுவதையும் அவரிடஞ் சொல்ல, அவர் கேட்டுப் பெருமகிழ்ச்சி யடைந்து இங்கிதத்தின் விவாகத்திற்கு ஆக வேண்டிய ஆயத்தங்களனைத்தும் விரைவிற் செய்வதாகச்சொல்ல இராமச்சந்திரன் அதனைக் கேட்டுச் சந்தோஷ மடைந்தானாய்த் தன் வீட்டிற்கு மீண்டான்.

### "வேண்டுவார் வேண்டுவன ஈவான் கண்டாய்"

இங்ஙனமாக, அடுத்தநாள் அதிகாலையில் அதிக மகிழ்ச்சியோடிருக்க வேண்டிய இங்கிதம், கவலையோடு கூடிய முகத்தினளாயிருப்பதை, இரஞ்சிதம் அவதானித்தாள் "தங்காய், ஏன் அம்மா, கவலைப்படுகின்றீர்? உமக்கு இங்கே நேர்ந்த குறையென்ன" என்று ஆவலுடன் கேட்க, இங்கிதம் பின்னும் அதிக கவலையோடுகூடியவளாய், "அக்கா, இங்கே எனக்கு எவ்வகையான குறையுமில்லை: என் சொந்தப் பெற்றார் உற்றார், உறவினர் அயலாரைக் காட்டிலும் இங்குள்ள நீங்களெல்லீரும் என்னைக்கூடிய அன்போடும் அருமையோடும்நடத்திவருகிறீர்கள்: நீங்கள் அநாதப் பெண்ணாகிய என்மேல் வைத்த அன்பினாலும் ஆதரவினாலும் இராமச்சந்திர அண்ணருடைய முயற்சியினாலும் நான் ஒருதொழிலைச்செய்து கௌரவமாகக காலம்போக்க வகை கண்டுகொண்டேன்: அவ்வளவோடு அமையாது நீங்களெல்லீரும் என்னை ஒரு தக்கவானிடத்தில் ஒப்பிக்கவும்நிச்சயித்துவிட்டீர்கள்; விவாகமும் விரைவில் நிறைவேறுமெனச் சொல்லி அதற்காகியமுயற்சிகளையுஞ்செய்கிறீர்கள்; என் பூர்வ வரலாறு முழுவதையும் சற்றேனும் ஒளியாமல் முந்தியே உங்களுக்குச் சொல்லிவிட்டேன்; என் பெற்றார் இந்த விவாகக் காட்சியைக் காண, அவர்கள் சமூகத்தில் என் கல்யாணம் நிகழ, அவர்களும் நானும் கொடுத்துவைக்கவில்லை. அதனையிட்டுக் கவலைப்பட்டு இனி ஆவதொன்றுமில்லை; ஆனால் என் அருமையான அக்கா, என் சிறியதாயைப்பற்றி நான் அதிக துயரப்படவில்லை' ஆயினும் என்னை அன்போடு வளர்த்த என் சிற்றப்பரும், என் அருமைத் தங்கையும், நான் அவர்களுடைய வீட்டைவிட்டு நீங்கியநாள்தொட்டு இற்றைவரையில் என்னையிட்டுக் கவலைப்பட்டுக்கொண்டேயிருப்பார்கள்; இது நிச்சயம்; மேலும் என் சிற்றப்பர், என்னைத் தேடி எங்கெங்கெல்லாம் அலைந்துதிரிகிறாரோ அறியேன்: இல்லையேல் சுகவீனமாகக் கிடந்த அவருக்கு ஏதும்ஆபத்துநேர்ந்ததோ, நான் பாவி! அதனையும் அறியேன்; ஆனால் ஆண்டவன் அப்படியான ஆபத்து நேர விடமாட்டாரென்பதுதான் என் நம்பிக்கை; அக்கா, சொல்லுகிறேனென்று என்னை விபரீதமாக எண்ணாதீர்கள்; எனக்கு ஒரு மங்கல கருமம் நிகழும்போது என் சிற்றப்பர், தங்கைச்சி முதலிய இவர்கள் சமூகமாயிருந்தால், எனக்குஞ் சந்தோஷந்தான்; அவர்களுக்கும் சந்தோஷமாக இருக்குந்தானே' இவைகளைச் சென்ற இரவு சிறிது நேரம் இருந்து சிந்தித்தேன்; சிந்திக்கத் தொடங்கிய நேரந்தொட்டு விடிகிறவரையில் நித்திரை வரவுமில்லை, என் கவலை அகலவுமில்லை; அக்கா, இதுதான் என் கவலைக்குக் காரணம்" என்று அதிக கவலையோடு சொன்னாள்; பரிவுடன் கேட்டுக்கொண்டு பக்கலிலிருந்த இரஞ்சிதமும் கவலைப்பட்டாள்; சற்று நேரத்தில் இரஞ்சிதம் தான் தேறி இங்கிதத்தையும் ஒருவாறு தேற்றி அவளை அன்புடன் பார்த்து "தங்காய், நீர் கவலைப்பட வேண்டாம்; உமக்கு நடக்கவிருக்கும் இந்தச் சம்பந்தமும் தெய்வத்தின் அருளாற்றான் நிறைவேறப்போகின்றது: தெய்வத்தில் நம்பிக்கை கொண்ட நீர் நினைக்குங் கருமமெல்லாம் அத் தெய்வத்தின் அருளால் நிறைவேறும்; வேண்டுவார் வேண்டுவன ஈவான் கண்டாய் எனப் பெரியோர் பாடியிருப்பதை நீர் படித்திருக்கிறீரல்லவா' முந்தியே தெய்வமே தஞ்சமென்ற கொள்கை பூண்ட நீர் இப்பொழுதும் அந்தத் தெய்வத்தையே தஞ்சமெனக்கொண்டு உமது குறைகளையெல்லாம் அந்தப் பெருமானுக்கு எடுத்து நாள்தோறும் முறையிட்டு வருகுதிர்; அவன் அருள் புரிவான்; சந்தோஷமாக இருக்கவேண்டிய சமயத்திலே கவலைப்பட்டால், கண்டவர் சில சமயம் விபரீதமாகவும் நினைத்தல்கூடும்; ஆதலால் கவலை வேண்டாம்" என்று பல சமாதானங்களைச் சொல்லி அவளைத் தேற்றினாள்.

### "வேறொன்றுமல்ல அக்கா, வெட்காயிருக்கிறது"

தேறுதலடைந்த இங்கிதம் வித்தியாசாலைக்குப் புறப்படவேண்டிய நேரஞ் சமீபித்துவிட்டபடியால் காலையிற் செய்யவேண்டிய ஸ்நானம் வழிபாடு போசனம் முதலியவற்றைத் துரிதமாக முடித்துக்கொண்டு வண்டி வரவை எதிர்பார்த்தவண்ணம் தலைவாசற் பக்கத்தில் இரஞ்சிதத்தோடு நின்றவள், அவளைப் பரிவுடன் பார்த்து, "அக்கா! நான் எப்படிப் பள்ளிக்கூடத்திற்குப் போகப் போகிறேன், போய்ப் படிப்பிக்கப்போகிறேன் என்று எனக்குப் புலப்படவில்லை......" எனச் சொல்லி முடிப்பதற்கிடையில், இங்கிதம் அவளைப் பாரத்து "என் தங்காய், சில நிமிஷத்தில் வண்டிவரும் ஏறிக்கொண்டு போகலாம்; போனவுடன் வழக்கம் போல் படிப்பிக்கவேண்டியவற்றைப் படிப்பிக்கலாந்தானே; இதில் என்ன கவலை?" என்று ஒன்றும் விளங்காதவள்போற் சொல்ல, இங்கிதம் "வேறொன்றுமல்ல, அக்கா, என்னையறியாமலே நேற்றுத்தொடக்கம் என் மனத்தில் ஒரு வெட்கம் புலப்படுகிறது; வண்டியில் ஏறிப் போகவும் பள்ளிக்கூடத்திற் போய்ப் படிப்பிக்கவும் நினைக்கவே உள்ளம் கூசுகிறது அக்கா" எனலும், இரஞ்சிதம் புன்னகைசெய்து, "தங்காய், இந்த விவாக விஷயம் இன்னும் பரகசியமாகவில்லை; உமக்கும் அவருக்கும் எங்களுக்குந்தான் தெரியுமென்று நினைக்கிறேன்; ஒன்றுமறியாதவள்போல் நீர் உம்முடைய உத்தியோகக் கடமையைப் பார்த்து வாரும்; தலைமையாசிரியரை அங்கே காண, சந்திக்கவேண்டி வந்தால், அவரை உம்முடைய வரன் என்று சிந்தியாமல், தலைமையாசிரியரென்றே மதித்து ஊடாடவேண்டும் அம்மா; அப்படி மதித்து நடந்தால், வெட்கமும் வராது, துக்கமுமுண்டாகாது; பிறர் சந்தேகப்படவும் மாட்டார்கள். அறிந்தும் அறியாதவர் போல நடக்கின்றதாகிய மடமென்னுங் குணம் எங்களுக்குத்தானேயுரியது; அதனாலல்லவா கற்றோர் எங்களை மடவாரென்று பாடல் படிப்பிலே சொல்லியிருக்கிறார்கள்; ஆனதால் அந்தச் சிந்தனையை விட்டுச் சந்தோஷமாகப் பள்ளிக்கூடத்திற்குப் போய்ச் சுகமே வாரும்" என்று இரஞ்சிதம் சொல்லிக்கொண்டு நிற்கும்போது, வண்டி வருதலும், "அருமையான அக்கா, போய்வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, இங்கிதம்வண்டியிலேறிக்கொண்டு வித்தியாசாலைக்குப் போவாளாயினள். (வரும்)

---

### சைவப்புலவர் இளஞ் சைவப் புலவர் தேர்தல்கள்

சென்னைச் சைவசித்தாந்த கழகத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்பெற்று வரும் மேற்படி தேர்தல்கள், இலங்கை மாணவர்களின் வசதியையுத்தேசித்து, நிகழும் நவம்பர் ௴ 17உ ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பதரை மணிவரையில், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மேன்மண்டபத்தில் திருவாளர்கள்: S. அண்ணாமலைப் பிள்ளை, மு. மயில்வாகனம், ம. வே. திருஞான சம்பந்தனாகிய மூவரின் மேற்பார்வையில் வழக்கம்போல் நடைபெறும்; தேர்தலிற் பிரவேசிப்போர் விடையெழுதுதற்காகிய எழுதுகோல், மை காகித மென்னுங் காணங்களைத் தாமே கொண்டுவருதல் வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடிதம்

### தமிழ் பரீட்சார்த்திகளை ஏமாற்ற வேண்டாம்

ஐயா,

ஆவணிமாதம் நடந்த தமிழ் ஆசிரிய தராதரப் பரீட்சையானது கேள்விப் பத்திரங்கள் வெளியில் வந்தமையினால் நிறுத்தம் செய்து ஐப்பசிமாசம் 28-ந் திகதி தொடக்கம் கார்த்திகைமாசம் 2ம் திகதி வரையும் நடாத்தப்படுமென்று பரீட்சார்த்திகட்குப் பிரவேசச் சீட்டும், நேரசூசியும் அனுப்பப்பட்டன இதனால் பரீட்சார்த்திகள் அதி ஊக்கத்துடன் தம் ஊண், உறக்கங்களை இழந்து படித்தனர். திடீரென எக்காரணம் பற்றியோ மார்கழி மாசம் 13ந் திகதி தொடக்கம் பரீட்சை நடாத்தப்படுமென்று ஒத்தி வைக்கப்பட்டது.

இதை அறிந்த பரீட்சார்த்திகள் இடியைக் கேட்ட அரவம் போன்று ஏக்கமுற்றனர். ஆனல் இதை நம்பாது பொய் என்று நினைத்து பரீட்சை நடாத்தப்படும் இடங்களை அணுகி காலை 9 மணிவரையும் தங்கினர் அவ்விடத்தில்பரீட்சார்த்திகளை ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்ட பொதுமக்களுக்கு என்ன மறுமொழி கூறுவது. இதற்கு மறுமொழி கூற இயலாத பரீட்சார்த்திகள் முகவாட்டத்துடன் தம்இல்லங்களை ஏகினர் இதுதான பரீட்சார்த்திகளின் அதிஷ்டம்.

ஒருவேளை இவ்விதம்திகதிகளைமாற்றி மாறிக் குறிப்பது பரீட்சார்த்திகளுக்குத் தமிழ்மொழியில் வெறுப்பை உண்டாக்கவா? அன்றேல் இவ்வாசிரிய தராதரப் பரீட்சை இம்முறையே கடைசி யாவரும் தங்குதடையின்றி சித்திபெறவேண்டும் என்று பரீட்சார்த்திகளை மேன்மேலும் படிக்கச் செய்யவா? மார்கழிமாதப் பரீட்சையாவது ஏமாற்றாது சிறிதும் தடையின்றி நடைபெற இறைவன் அருள் புரிவானாக.

பரீட்சார்த்தி.

---

### விவாகம்

சிவகுருநாதன் — மகேசுவரி

வண்ணார்பண்ணை திரு. சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியாரவர்களின் இரண்டாம் புதல்வராகிய திரு. சிவகுருநாதன் (B. A) அவர்களுக்கும், நல்லூர், வழக்கறிஞர் திரு. C. T. குமாரசுவாமியவர்களின் ஏகபுத்திரி, திருவளர் செல்வி மகேசுவரியம்மாளுக்கும் இன்று (1-11-46) வைகறையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், மணமகளில்லத்தில், விவாகம் சிறப்புற நிறைவேறலாயிற்று; இன்று பிற்பகல் 4 மணிவரையில் வண்ணார்பண்ணையிலுள்ள மணமகனில்லத்தில் உபசரணைக் கொண்டாட்டம் நிகழுமென அறியலானோம்.

தம்பதிகள் பதினாறுபேறும்பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீசுவரப் பெருமான் திருவருள் முன்னிற்பதாக.

---

## கார்த்திகைமாச விசேஷ தினங்கள்

நஉ (18-11-46) திங்கள் மெய்ப்பொருள்நாயனார் குருபூசை
சஉ (19-11-46) செவ்வாய் ஆனாயநாயனார் குருபூசை
சூஉ (21-11-46) வியாழன் பிரதோஷ விரதம்
அஉ (23-11-46) சனி அமாவாசை விரதம்
ககஉ (26-11-46) செவ்வாய் மூர்க்கநாயனார் குருபூசை
கஉஉ (27-11-46) புதன் சிறப்புலி நாயனார் குருபூசை
உகஉ (6-12-46) வெள்ளி பிரதோஷம்
உஉஉ (7-12-46) சனி திருக்கார்த்திகைவிரதம்,குமாராலயதீபம்விஷ்ணு ஆலயதீபம், கணம்புல்லநாயனார் குருபூசை
உநஉ (8-12-46) ஞாயிறு பூரணை விரதம், சர்வாலய தீபம் (விளக்கீடு) இரவு சந்திரகிரகணப் புண்ணியகாலம்
உசஉ (9-12-46) திங்கள் விநாயகசஷ்டி விரத ஆரம்பம்
உஅஉ (13-12-46) வெள்ளி நாவலர் குருபூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பனை கடந்தசோதி

1-ம் பக்கத் தொடர்ச்சி

கள் உறைதலினல் என்பது. ஆகவே இஃது உலகத்து நிகழ்வதெனக்கூறிய நச்சினர்க்கினியார் உரை பொருத்த முடையதன்று. ஏனெனில் அவர்கள் காண்பதற்கு உலகத்தவர் போலத் தோற்றினும், அவர்கள் உலகில் நீங்கிப் புதிய உலகத்திலேயே(தம் உணர்வுலகத்தில்) வாழ்கின்றனர். ஆதலினலேயே இல்லது இனிபது நல்லது எனவும், பயன் வீடுபேறு பயத்தல் என்னும் பயன் பொருந்துமெனக் கொள்வது முயற்கொம்பு உண்டென்பது போலும்.

பரம்பொருளாகிய இறைவன் நிலைமையை அநுபூதியிற் கண்டு அன்புடன் கூடி உண்மை ஞானம் தலைப்பட்ட ஞானியர்கள் அருங் கற்பனையுள்ளம் வாய்க்கப் பெற்ருேராவர். மணிவாசகப் பெருந்தகையார் அருளிப திருக்கோவையார் என்னும் தெய்வமணம் கனிந்த அருங் கற்பனைக் கருவூலம் உலகினர்க்கு அருங் கற்பனையைத் தெளிவுறுத்தும் எடுத்துக்காட்டாகும். அஃதேபோல மூவர் தேவாரத்தினுள்ளும் கூர்ந்து கவனிப்போமாயின் ஆங்காங்கு அவ்வடியார்கள் அருங்கற்பனையுள்ளம்வாய்க்கப்பெற்றமையால் ஆட்கொள்ளப்பட்டமை தெளிவாகிறது. இவ்வருங் கற்பனையுள்ளம் வாய்க்காதோர் முத்திநிலை எய்துதல் இயையாததாகும். இஃது எத்துணை வலுவடைகிறதோ அத்துணையண்மையில் இறைவனன்பு கிட்டுவதாகும். இதன் முன்னர் ஏனைச்சிந்தனை கற்பனை எதிர்நிற்கமாட்டா. ஆதலினலேயே திருநாவுக்கரசு நாயனர்மீது சமணப் பிசாசுகள் செய்த தந்திரங்களும் மந்திரங்களும் பயனற்றனவாயின. அன்றியும் இன்ப துன்ப உணர்வுமின்றி வாழ்ந்து, ஓடும் செம்பொன்னும் ஒப்ப நோக்கி வாழக்கூடிய உயர்நிலை உண்டானதும் அருங்கற்பனை வன்மையாலேயே 'அன்பு தம்பிரான் திறத்துச் சாயார்'' எனவும், ''இறைவன்ருள் பற்றிய்வுள்ளத்தராய்'' எனவும், கூறக்கூடிய நிலையை ஆக்கியதும் இவ்வருங் கற்பனையே சமண் பௌத்தம் முதலிய சமயப் போர்கள் எல்லாவற்றையும் வென்று 'பானல்வா யொருபாலன்' சைவத்தைத் தாபிக்க உதவியதும் இறைவன் மாட்டுப் பூண்ட அருங் கற்பனையே. அதன்முன் எதன் வலியும் நிற்காதென்பதைக் கருதியே ''ஒருமைபால் உலகை வென்ருர்'' என இறைவனே சுந்தரருக்கு அடியார். பெருமையை விளக்குமிடத்துக் கரி பகர்வாராயினர்.

## கற்பனை கடந்த சோதி

மேற்கூறிய அருங்கற்பனை வாய்க்கப்பெற்றவர் ஆன்மாவும் அறிவும் வேருக இருத்தல் அமையாது. 'அறிவேயான்மாவாக நேர்காணும்' அவ்வறிவு ஒளியில் இறைவனது ஒளி தோன்றும். அதன்முன் மல மறைப்புகளும் எதிரமாட்டா. இந்நிலை அடைதல் ஓர் பிறவியில் இயைவதொன்றல்ல; முன்னைப் பிறவிகளின் தேட்டத்தால் அஃது சாதனைப்பட்டு வலுவடைந்து உயர்வதன்றிக் கற்றுக்கொண்ட பாத்திரத்தில் கைகூடுவதன்று; கற்றல் இலகு: அவ்வழியில் நிற்றல் அரிது. அதற்காகவே பல்பிறவிச் சாதனையும வேண்டப்படும். அது கருதியே ஞானசம்பந்த சுவாமிகளும் தெளிவாக எடுத்து,

''எதுக்களாலும் எடுத்த
மொழியாலும் மிக்குச்
சோதிக்கவேண்டா
சுடர்விட்டுளன் எங்கள்சோதி
மாதுக்கம் நீக்கலுறுவீர்
வம்மின்கள் வந்தாற்
சாதுக்களாவீர் இறையே
வந்து சார்மின்களே''

என்றும்,

''கீதம் வந்தவாய்மையாற் கிளர்
தருக்கினர்க்கல்லால்
ஓதி வந்த வாய்மையால்
உணர்ந்துரைக்க லாகுமோ''

எனவும் மணிவாசகனர் ''கற்பனவும் இனியமையும் ... .... கற்ருவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே'' என்றும் அருங்கற்பனைப் போதனை (கல்வி) யிலும் தானே அனுபூதியில் அடைதல் மிகப் பிரதானம் என்பதனை விளங்க வைத்தார். இச்சோதி அருங் கற்பனை யுணர்வுள்ளத் தாமரையில் ஒளிவிடுமேயன்றி யேனைய இடத்து ஒளிவிடாது காண்டல், அனுமான ஆகம அளவைகளால் மாத்திரம் உணர்தல் சாலும் எனக் கருதுவோர் உள்ளத்துள் இச்சோதி சுடர்விடாது. சாதுக்களாகியும், கீதமினிதாக வாயார வாழ்த்துபவராகியும், ''அழுதால் உன்னைப் பெறலாமே'' என்பதை உணர்ந்தும் செய்து காட்சி பெறலாமேயன்றிக் கல்வித் தருக்கினுள்ளும் ஒளிவிடாது. அதனலேயே மணிவாசகனர் ''நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ'' எனத் தம் உள்ள நைவைத் தெள்ளத்தெளியக் கூறினர். கல்வியிலும் இறையனுபவ முதிர்வே பெரிதென்பதனை ஞானசம்பந்தர் அம்மையப்பரை அழுதழைத்துப் பாலனக இருந்து வந்ததுவென்றதுமே சான்று பகரும். அருங்கற்பனை யுணர்வினுள்ளே இவ்வொளி விளக்கத்துடன் நெடிது தோற்றும் என்பது இறைவனடியவர் திருவாய்மலர்ந்த செய்யுட் பகுதிகளில் இச்சோதி யென்னும் சொல்லாட்சி வருவதிலிருந்தே தெரியலாம். 'அருங் கற்பனை கற்பித்தாண்டாய்' எனவும், 'ஒளிவளர் விளக்கே' என்றும், 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' என்றும் சோதியுமாய் இருளாயினர்க்கு என்றும் 'சோதிவானவன்' என்றும், 'மிக்காய் விளங்கொளியாய்' என்றும் நால்வர் வாக்கிலிருந்தும் மிகவும் கூடுதலாக வருவதனை உற்று நோக்கின் அறியப்படும்.

ஆனல் அருங் கற்பனைக்கும் அச்சோதி எட்டுதல் இயையாது என்பதனை யாம் இன்னும் கூர்ந்துணர்தல் அவசியம், அடியார்கள் வருந்தி அழுது தவித்துக் கொண்டாலன்றி அக்காட்சியை யறிவ தரியதென்ருர். அதனை எண்ணுதற்கெட்டா' எனவும் உரையுணர்விறந்து எனவும், 'வானிடைவாள்'' என்னும், 'கடந்த' என்றும் பொருளபடக் கூறப்படல் நோக்குடைத்து. 'பேணலால் எம்மைப் பெற்ருர்' என்பதில் வரும் பேணுதல் கடந்ததென்பதற்கு இன்னும் எடுத்துக்காட்டாகும்.

இதுவரை கூறியவற்ருல் சிஞ்ஞான சாஸ்திரம் சைவசித்தாந்தம் கண்ட அருங்கற்பனையைக் கிட்டாதென்பதும், அது சிந்தனையென்றும், மற்றுக் கற்பனை: இன்பக் கற்பனை துன்பக் கற்பனை என இருபிரிவாகி எண்வகைச் சுவைகளை அடக்கி மனமும் மதியும் கலந்துணரும் அறிவென்றும், மூன்ருவதாக அருங்கற்பனை ஞானிகளது உலகப்பற்றொழிந்து பற்றற்ருன் பற்றினைப்பற்றிய நிலையென்றும, சோதியென்பது இறை தன்அடியார் உள்ளக் கமலத்துத் தன் காட்சியளிக்கும் தோற்றமென்றும், அருங் கற்பனை சோதியைக் காணவேண்டுமாயின் அழுதால் அல்லது அழைத்தாற்ருன் பெறக்கிட்டுமென்றும், இதில் ஆன்மாவோடு மதி மனம், சித்தம், அகங்காரம் என்பனவும் ஒடுங்கி அதுவே ஆன்மாவாக ... நிலையடையும் என்பது தெளிவாகிறது.

# பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)

# தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 211 1-11-46—30-4-47 (வெ)

# ஜீவாதார வைத்திய விளம்பரம்

மானிடர்க்குப் பெருஞ் செல்வமாகக் கிடைத்த சஞ்சீவி வைத்தியம்

ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம் இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்தி வரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11-46)

## நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

●

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)

## உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

●

அப்படியானல்

●

# இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்

## படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
அவர்கள் B. A. எழுதியது

பயிற்றப்படும் தமிழ் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பரீட்சைக்கும், ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும் பாடமாக விதிக்கப்பட்டுள்ளது

இதன் இரண்டாம்பதிப்பு ஷை நூல் ஆசிரியர் அவர்கள் செய்த பல திருத்தங்களோடு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்
வெளியீடாக அச்சிடப்படுகின்றது.

கூடியசீக்கிரம் வெளிவரும்

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, November, 1, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org